# மாகோ காடுகளில் பதுங்கியிருந்த

பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 ஆவணி 23 றமழான் 23 இதழ்: 208
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 8-9-77

# மலைநாட்டுத் தமிழர்கள்

## அகதிகளாக நேற்று யாழ்நகர் வந்தனர்

யாழ்ப்பாணம், வியா

அண்மையில் நடைபெற்ற இனக்கலவரங்களினால் மாகோ பகுதியில் பாதிக்கப்பட்ட பெரும்பாலும் மலைநாட்டவர்களான சுமார் 60 அகதிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். இவர்களில் ஒரு பகுதியினர் பண்ணை அகதிகள் முகாமிலும் ஏனையோர் யாழ் இந்துக் கல்லூரி முகாமிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் கலவரத்தின்போது காட்டுக்குள் மறைந்திருந்ததாகவும் பின்னர் கடற்படையினர் சென்று பாதுகாப்புடன் கூட்டி வந்து மாகோ பொலிஸ் நிலையத்தில் சேர்ந்ததாகவும் கூறப்படுகிறது. இவர்கள் மீண்டும் தத்தமது இடங்களுக்குச் சென்றபோது அங்கு திரும்பவும் நெருக்கடி ஏற்படவே உடனடியாக கடற்படையினரால் குருநாகல் அகதிகள் முகாமுக்கு இவர்களை அனுப்பி வைத்தனராம். அங்கிருந்து புகைவண்டிமூலம் யாழ்நகர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் சிலரிடம் நீங்கள் மீண்டும் பழைய இடங்களுக்கு போவீர்களா என்று கேட்டபோது தாம் இனி போவதில்லை என்றும் தமிழ்ப் பகுதியில் எங்கேயாவது வாழவிரும்புவதாகவும் கூறினர்.

இந்துக் கல்லூரி முகாமில் தற்போது 150 பேர் அகதிகளாக தங்கியுள்ளனர் இவர்களை இன்னும் ஒரு வார காலத்தில் வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. (கு)

•••

## முன்னாள் எம்.எல்.ஏ. கைதாகி விடுதலை

சென்னை, செப். 9

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கௌத்தூர் கோதண்டம், கையெழுத்து மோசடி, மற்றும் ஊழல்கள் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டார். 1967-ம் ஆண்டு தொடக்கம் இவர் 1971-ம் ஆண்டுவரை சட்டசபை உறுப்பினராக இருந்தார். கைதுசெய்யப்பட்ட திரு. கோதண்டம் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

## இனக்கலவர சேதங்கள் பற்றி

# மாவட்ட வாரியாக

# புள்ளி விபரம் சேகரிப்பு

# பிரதமரின் பணிப்பின்மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

நாட்டில் நடந்த கலவரத்தினால் ஏற்பட்ட சேதங்கள் பற்றி மாவட்ட ரீதியாக புள்ளி விபரங்களை உடனடியாக திரட்டும்படி, பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று அரசாங்க அதிபர்களைப் பணித்துள்ளார்.

பிரதமரின் பணிப்பைத் தொடர்ந்து, யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த உதவி அரசாங்க அதிபர்கள் மாநாடொன்று உதவி அதிபர் திரு. ஏ. ஏ. யோசப் தலைமையில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் புள்ளி விபரங்கள் திரட்டுவது பற்றி உதவி அரசாங்க அதிபர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திலும் இன்று முதல் இம்மாதம் 20ம் தேதி வரை புள்ளி விபரங்கள் திரட்டப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்தப் பகுதியில் கலவரத்தினால் ஏற்பட்ட சேதங்கள் பற்றிப் புள்ளி விபரங்கள் திரட்டுமாறு பிரதமர் பணித்துள்ளார். ஆனால் தென்பகுதி

6-ம் பக்கம் பார்க்க)

## 10ம் திகதிக்கு முன் துவக்கை ஒப்படைக்க வேண்டும்

யாழ்ப்பாணம், வியாழன்

பாதுகாப்பு நடவடிக்கையின் பொருட்டு அனுமதிப் பத்திரங்கள் உள்ளவர்கள் தமது துவக்குகளை இம்மாதம் 10-ந் திகதிக்கு முன் பொலிசாரிடம் ஒப்படைக்காவிட்டால் சட்டபூர்வமாக இவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

துவக்குச் சொந்தக்காரர்கள் இதுவரை துவக்குகளை ஒப்படைக்காவிட்டால், 10ந் திகதிக்கு முன்னர் தமது துவக்குகளை அண்மையிலுள்ள பொலிஸ் நிலையங்களில் கொடுத்து ரசீதுகளை பெற்றுக்கொள்ளுமாறு பொலிசார் கோரியுள்ளனர்.

## ரசாயனப்பொருட்கள்

யாழ்.மாவட்டத்திலுள்ள சில பாடசாலைகளில் ஆய்வு கூடங்கள் உடைக்கப்பட்டு இரசாயனப்பொருட்கள் களவாடப்பட்ட சம்பவங்களையடுத்து, யாழ். மாவட்டத்திலுள்ள சகலபாடசாலைகளிலுமுள்ள இரசாயனப் பொருட்களை பொலிஸ் பாதுகாப்பில் வைக்குமாறு பொலிஸ்பகுதியினருக்கு உத்தர விடப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. (செ)

## குழுக்களின் பிரதித்தலைவர்

கொழும்பு, புதன்

கொழும்பு கிழக்குத் தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. எட்மன் சமரவிக்கிரம சபைக்குழுக்களின் பிரதி தலைவராக இன்று ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

திரு. சமரவிக்கிரமவின் பெயரைச் சபை முதல்வர் திரு. ஆர். பிரேமதாஸ முன்மொழிந்தார். எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் வழிமொழிந்தார்.

## புதிய கடைகளை அமைக்கும் வேலை நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் பழைய மார்க்கட்டிலும், பஸ்நிலையப் பகுதிகளிலும் தரைமட்டமான கடைகளுக்குப் பதிலாகப் புதிய கடைகளை அமைப்பதற்கான வேலைகள் நாளை மறுதினமே ஆரம்பமாகும். இதற்கான அடிக்கல் நாளை நண்பகல் 12 மணியளவில் யாழ். மாநகர விசேட ஆணையாளர் திரு. கே. சிவஞானத்தால் நாட்டப்படும்.

சுமார் நாலரை லட்சம் ரூபா செலவில் இக்கடைகளைக் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து, ஆணையாளர் துரித நடவடிக்கையில் இறங்கியுள்ளார்.

இரண்டரை மாத காலத்திற்குள் இக்கடைகளைக் கட்டி முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பழைய மார்க்கட்டில் 104 கடைகளும், பஸ்நிலையத்தில் 26 கடைகளும் கட்டப்படும். பழைய கடைச் சொந்தக்காரர்களுக்கே இக்கடைகள் வழங்கப்படவிருக்கின்றன.

(6-ம் பக்கம் பார்க்க)

## திறப்பு வைபவம் டிசம்பரில் நடக்கும்

யாழ்ப்பாணம், வியா

"கலவரத்தின்போது தீயினால் தரைமட்டமான யாழ் பழைய மார்க்கட், பஸ் நிலையப் பகுதிகளில் கட்டப்படவிருக்கும் புதியகடைகள் டிசம்பர்மாதம் 1ம் திகதி திறந்து வைக்கப்படும்."

யாழ். மாநகரசபை மண்டபத்தில், பாதிக்கப்பட்ட பழைய மார்க்கட், பஸ் நிலைய வியாபாரிகள் மாநாட்டில், யாழ். மாநகரசபை விசேட ஆணையாளர் திரு. கே. சிவஞானம் மேற்கண்டவாறு தகவலைத் தெரிவித்தார்.

விசேட ஆணையாளர் திரு. கே சிவஞானம் மேலும்கூறியதாவது: பஸ் நிலையத்தில் எரிந்த கடைப்பகுதியை, பஸ் நிலைய விஸ்தரிப்புக்கு பாவிக்க தருமாறு இ. போ. ச. பிராந்திய முகாமையாளர் கேட்டபோது நான் அதற்கு மறுத்துவிட்டேன். அதே இடத்தில் 26 கடைகள் மீண்டும் கட்டப்படும் எனக்கூறினேன்.

புதிதாகக் கட்டப்படும் கடைகள், அந்தந்த இடத்தில் பழைய உரிமையாளர்களுக்குக் கொடுக்கப்படும். வேறு எவருக்கும் கடைகள் கொடுக்கப்படமாட்டாது.

எந்தவிதத்திலும் கடைகள் யாவும், இரண்டரை மாதத்தில் கட்டிமுடிப்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவேன்.

எதிர்ப்பக்கத்திலுள்ள சக்திகளையும் உணர்ச்சிகளையும்,

(6-ம் பக்கம் பார்க்க)

# ரூ. 3 லட்சம் பெறுமதியான உணவுப் பொருட்கள்

## கிளிநொச்சிமக்கள் அகதிகளுக்கு வழங்கினர்

யாழ்ப்பாணம், வியா.

கொழும்பிலும் கெக்கிராவையிலுமிருந்து நேற்று மூன்தினம் 347 அகதிகள் கிளிநொச்சிக்கு வந்து சேர்ந்தனர். இவர்கள் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் உள்ள முகாமில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சித் தொகுதியிலுள்ளவர்த்தகர்களும், பொது மக்களும் இதுவரை மூன்றுலட்சம்ரூபா பெறுமதியான உணவுப்பொருட்களை கிளிநொச்சி முகாம்களிலுள்ள அகதிகளுக்கு வழங்கியுள்ளனர்.

அரசினால் வழங்கப்படும்உணவுப்பொருட்கள் கிழமையில் மூன்றுநாட்களுக்கு மட்டுமே காணக்கூடியதாக இருப்பதாக முகாம் பொறுப்பாளர் ஒருவர் தெரிவித்தார். அரிசி. மா மட்டுமே அரசு வழங்குவதாகவும் அவர் கூறினார். மிகுதி உணவுப்பொருட்களை பொதுமக்களே வழங்கி வருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

கிளிநொச்சியிலுள்ள முகாம்களில் உள்ள விபரம் வருமாறு: கிளிநொச்சி மகாவித்தியாலயம் - 347, வட்டக்கச்சி பாடசாலை-229, இராமநாதபுரம் 206, உருத்திரபுரம் 7-ம் வாய்க்கால் - 315, முரசுமோட்டை-180, தருமபுரம்-384, ஸ்கந்தபுரம்-450, கனகபுரம் - 294, பளை மகாவித்தியாலயம்.-450. சுமார் ஆயிரம்பேர், உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர். இவர்கள்பற்றியவிபரம் அகதிமுகாம்களில் பதியப்பட்டுள்ளது.

இம்மாதம் 12-ம் தேதிக்கு முன்னர் கிளிநொச்சி முகாம்களில் உள்ள அகதிகளைப் பாடசாலைகள் ஆரம்பிக்க வசதியாக வேறு இடங்களுக்கு மாற்ற சமூக சேவை இலாகா நடவடிக்கை எடுத்துவருகிறது. (க)

## அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்
யாழ்ப்பாணம் றோமன்கத்தோலிக்க ஆயர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்
வழக்காளி

இல. எல்/5460

எதிராக

1. அன்ரன் கதிரவேலு பொன்னம்பலம் (இறந்துவிட்டார்).
2. பொன்னம்பலம் கைம்பெண் மேரி, அக்னஸ் 10, கதீட்றல் றோட் யாழ்ப்பாணம். (தனிப்பட்ட முறையிலும் காலஞ்சென்ற 1ம் எதிராளிக்குப் பதிலாகவும்)
3. திருமதி சிவஞானவதி பொன்னம்பலம் சென்பற்றிக்ஸ் பாம். கிளிநொச்சி.

-பிரதிவாதிகள்

கீழே நன்கு விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்தின் உடமையை மேற்சொல்லப்பட்ட வழக்காளிக்கு யாழ்ப்பாண மேல்நீதிமன்ற பிசுக்கால் ஒப்படைப்பதை மேற்சொல்லப்பட்ட 3ம் பிரதிவாதி எதிர்த்து தடைசெய்தார். கீழே நன்கு விபரிக்கப்பட்ட ஆதனம் முழுவதிலும் அல்லது ஏதேனும் பாகத்தில் அக்கறைஉடையவர்களும் மேற்சொல்லப்பட்ட வழக்காளிக்கு ஆட்சி உடமையை வழங்கப்படுவதை ஆட்சேபிப்பவர்கள் எவராவுதல் தங்கள் கோரிக்கைகளை இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட பதினைந்து நாட்களுக்குள் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கும்படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கராட்சிப்பகுதி பச்சிலைப்பள்ளி கோவிற்பற்று பெரியபரந்தன் இறை.

சென்பற்றிக்ஸ் பாம் என்றழைக்கப்படும் 'பெரியபரந்தன் காடு' 43 ஏக்கர் 1 றூட் 03 பேர்சஸ் இதில் வடக்குப்பக்கமாக 22 ஏக்கர் 1றூட் 03பேர்சஸ் எல்லை கிழக்கும் வடக்கும் முடிக்குரிய வாய்க்காலும், வழக்காளிக்குரிய ஆதனமும் மேற்கு அன்ரன் கதிரவேலு பொன்னம்பலத்திற்கும் காணி அபிவிருத்திச் சட்டத்தின்படி குத்தகையாகக் கொடுக்கப்பட்ட முடிக்குரிய காணி. தெற்கு முடிக்குரிய வாய்க்காலும் வழக்காளிக்குரிய காணியும் இதடங்கலும்.

1977-ம் ஆண்டு
செப்தெம்பர் மாதம் 5-ந்திகதி

செ. நடராசா
பிசுக்காலுக்காக
மேல்நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

7019

## ஆசிரியருக்குக் கடிதம்:

# பாதிக்கப்பட்ட அரசஊழியர் மீண்டும் திரும்ப...

கடந்த 16-ம் திகதி ஆரம்பித்த இனக்கலவரம் பற்றிப் பல்வேறு இடங்களிலும் பலர் பலவிதமாகப் பேசினும், இது பற்றி நான் ஆலோசனைகள் சிலவற்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அனுராதபுரத்திலிருந்து அல்லோலகல்லோலப் பட்டு அகதிகளாக வந்த சிலரை நான் சந்தித்து உரையாடினேன். அதன்பின் தமிழ்ப் பகுதிகளைத் தவிர்ந்த ஏனைய இடங்களில் தொழில் புரிவோர் சம்பந்தமாக அவர்களின் பாதுகாப்பிற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என உணர்ந்தேன், தமிழ் பேசும் ஊழியர்கள் தாய் நாடாகக் கொண்ட தமிழ்ப் பிரதேசத்தைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் கடமை ஆற்ற வேண்டுமென்றால் பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தியாக்கப்படவேண்டியது அவசியம்.

### நிபந்தனைகள்

(1) இவர்களின் உயிர்ப் பாதுகாப்பிற்கு சம்பளம், தருதி முதலியவற்றை கணித்து காப்புறுதி அமைப்பிற்கு அரசாங்கம் அதற்குரிய கட்டணம் வழங்க வேண்டும்.

(2) மேற்கூறியது போல் இவர்களின் குடும்பம் சொத்துரிமை முதலியவற்றிற்கும் அரசாங்கம் காப்புறுதி வழங்க வேண்டும்.

(3) நான் அறிந்தவட்டில் அனுராதபுர மாவட்டத்தில் தமிழ் பேசும் ஊழியர்களை அதே இலாகாக்களில் உள்ள சிறுதொழிலாளர்களும் வேறு சிலரும் தாக்கினார்களாம். எனவே தமிழ் பேசும் ஊழியர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்புவதானால் அவர்களுக்குத் தற்பாதுகாப்பிற்காகக் கந்தோருக்குச் செல்லும்பொழுது ரிவொல்வரும் சுழல் துப்பாக்கியும் வீட்டில் கேபினும் முறுக்குக் குழல் துப்பாக்கியும் உத்தரவுடன் வழங்கப்பட வேண்டும்.

(4) இவர்கள் அனைவரும் தத்தம் உயிரைக் காப்பாற்றி சொத்துடைமைகளை இழந்து வந்தனர். எனவே தமது வாழ்க்கையை அவ்விடங்களில் நிறுவவேண்டி இருக்குமாதலால் அவர்களுக்குச் சேதமான சொத்துடைமைக்குரிய நிவாரணம் முன்னோடியாக அரசாங்கத்தால் வழங்கப்படவேண்டும.

[5] இவை அனைத்தும் அரசாங்கம் செய்து கொடுக்கும் வரை இவர்கள் லீவில் நிற்க அனுமதி வழங்கப்பட வேண்டும்.

[6] இவற்றைச் செய்ய அரசாங்கம் மறுத்தால் பென்சன் பெறக் கூடியவர்களுக்கு பென்சனையும் வழங்கி ஏனையோர் ராஜினமா செய்து பிறநாடுகளில் வேலைதேட அனுமதி வழங்கவேண்டும்.

மல்லாகம் — சு. ஸ்ரீபாஸ்கரன்

## தட்டுப்பாடு நீங்கியது

பண்டத்தரிப்பு, புதன்

யாழ். மாவட்ட மருந்துக் களஞ்சியப் பகுதியினரால் இவ்வாரம் மானிப்பாய், உடுவில், அளவெட்டி ஆகிய இடங்களிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு தேவையான மருந்து வகைகளில் ஒரு பகுதி அனுப்பிவைக்கப்பட்டதைத் தொடர்ந்து நீண்ட நாட்களாக இவ்வைத்தியசாலைகளில் நிலவிவந்த மருந்துத் தட்டுப்பாடு நீங்கியுள்ளது.

மானிப்பாய்த் தொகுதி எம். பி. திரு. வி. தர்மலிங்கம் இந்த வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாடு பற்றிச் சுகாதார அமைச்சருக்கும் யாழ். மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகருக்கும் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# ரயில் மூலம் திராட்சை கொழும்பு செல்கிறது!

## வடக்கில் ஒரு லட்சம் றாத்தல் உற்பத்தி

யாழ்ப்பாணம், வியா.

வடபகுதியில் உற்பத்தியாகும்திராட்சை பழங்கள், மீண்டும் ரயில் மூலம் கொழும்பிற்கு அனுப்பப்பட்டு வருவதாக அகில இலங்கை திராட்சை செய்கையாளர் சங்க செயலாளர் திரு. ஈ. சபாரத்தினம் தெரிவித்தார்.

40 றாத்தல்களைக் கொண்ட பெட்டிகள் மூலம், தினமும், தற்போது 300 முதல் 400 றாத்தல் அனுப்பப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில்தற்போது றாத்தல் 6 ரூபாவாக விற்கப்படும் திராட்சை பழம் கொழும்பில் றாத்தல் 15 ரூபாவாக விற்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

வடபகுதியிலுள்ள திராட்சை தோட்டங்களில் றாத்தல் 5 ரூபாவாக வெட்டப்பட்டு கொழும்பிற்கு அனுப்பப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

திராட்சைப்பழம் பறிக்கும் காலம் இம்மாதம் ஆரம்பித்துள்ளதாகவும். இம்முறை வடக்கில் சுமார் ஒரு லட்சம் றாத்தல் பறிக்கப்படும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

# ஒரு தொழில் துறைக்கு ஒரு தொழிற்சங்கம்

## இ. போ. ச.வில் முதலில் அமுலாகும்

கொழும்பு, புதன்

ஒரு தொழில்துறைக்கு ஒரு தொழிற்சங்கமே இருக்கவேண்டும் என்ற அரசின் திட்டம் முதலில் இ.போ.ச.தொழிலாளரிடையே அமுல்செய்யப்படும்.

இத்தகவலை போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். மொஹமட் நேற்று இ. போ. ச. தலைமையலுவலக ஊழியர்களிடையே தெரிவித்தசர்

ஐக்கிய தேசியக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் புதிய அரசின் கொள்கைப்பிரகடன விளக்க உரையிலும் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் மட்டுமே இருக்கவேண்டும் என்ற திட்டத்தை இ. போ.ச. ஊழியர்களிடையே முதலில் அமுல்செய்யுமாறுபிரதமர் தம்மிடம்தெரிவித்துள்ளதாகவும் போக்குவரத்து அமைச்சர்கூறினார். (இ)

## நூலகம்

சுழிபுரம், புதன்

பண்ணாகம் தெற்கு ஸ்ரீ முருகன சன சமூக நிலையத்தினர் புதிய நூலகத்திற்கு வேண்டிய நூல்களை சேகரித்து வருகின்றனர் பலவகைப்பட்ட பல நூற்றுக் கணக்கான நூல்களை திரட்டியுள்ள நூலகக் குழுவினர், விரைவில் நூலகத்தை ஆரம்பிக்கவுள்ளனர்) (உ

## தொழிற்சாலை

யாழ்ப்பாணம், வியாழன்

தமிழர் நலன்புரி இயக்கத்தின் கைத்தொழில் பேட்டை நிறுவும் முயற்சியாக நாளை வெள்ளிக்கிழமை கொக்குவில் ஓம்சக்திகலாலயத்தில் கடதாசி விளையாட்டுப் பொம்மைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதை மில்க்வைற் தொழிலக அதிபர் திரு. க. கனகராஜா திறந்துவைப்பார்.

வைபவத்திற்கு இயக்கத்தின் தலைவர் சட்டத்தரணி. ம. ஆ. யேசுதாசன் தலைமைதாங்குவார். (கெ-உ)


## தேவை

தாளாந்த அடிப்படையில் வேலைசெய்வதற்கு லிகிதர், தட்டெழுத்தாளர் (ஆங்கிலம்) தேவை பின்வரும் தகமையுடையோர் 16-9-77 அன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

(1) லிகிதர்

தகைமைகள்:

(அ) க. பொ. த. சாதாரணம் கணிதம் அல்லது எண்கணிதத்துடன் ஆங்கிலம் உட்பட 5 திறமைச்சித்திகள்.
(ஆ) 30 வயதுக்குட்பட்டவர்கள்.
(இ) குறைந்தது 2 வருட அனுபவம் விரும்பத்தக்கது.

(2) தட்டெழுத்தாளர் (ஆங்கிலம்)

தகமைகள்

(அ) க. பொ த. சாதாரணம் ஆங்கிலம் உட்பட 3 திறமைச் சித்திகள்.
(ஆ) 30 வயதுக்குட்பட்டவர்கள்.
(இ) ஆங்கிலத்தில் நிமிடத்திற்கு 30 சொற்கள் அடிக்கும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்
சிநேகர் அபிவிருத்தி நிறுவனம்
காரைநகர்.

7015

# இலங்கைத் தமிழரின் பாதுகாப்புக்கு இந்திய அரசு நடவடிக்கை

## எம். ஜி. ஆரிடம் மொரார்ஜி நேரில் உறுதி

புதுடில்லி, செப் 7

இலங்கைத் தமிழ்மக்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கும் நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொண்டுள்ளது என்று இந்தியப்பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனிடம் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் நேற்று பிரதமர் திரு. மொரார்ஜிதேசாயைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

சுமார் முப்பது நிமிடங்கள் வரை நீடித்த இப்பேச்சுவார்த்தையின்போதே திரு. மொரார்ஜி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இப்போது இலங்கையில் நிலைமை சகஜ நிலைக்குத் திரும்பியுள்ளது என்றும் கலவரங்கள் அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் திரு. மொரார்ஜி திரு. எம். ஜி. ஆரிடம் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது திரு. எம். ஜி. ஆர். இலங்கையில் தமிழர்களுக்கு ஏற்பட்ட உயிர் உடைமை சேதங்கள் குறித்து தமிழ்நாடு அடைந்துள்ள துயர்பற்றி பிரதமரிடம் எடுத்துரைத்தார்.

மத்திய அமைச்சர் திரு. ஜோர்ஜ் பெர்னண்டஸ் கூட்டிய மகாநாடு ஒன்றுக்காக புதுடில்லி சென்றபோதே திரு. எம். ஜி ஆர். பிரதமரைச் சந்தித்தார். (இ)

## தமிழோசை நிகழ்ச்சியில் மாற்றம்

லண்டன், செப். 7

பி. பி. ஸி. தமிழோசை நிகழ்ச்சிகள் செப்டம்பர் நாலாம் திகதியிலிருந்து தமிழோசை நாட்களில், இலங்கை நேரப்படி மாலை 3-00 மணி முதல் 3-15வரையும், 8-45தொடக்கம் 9-15வரையும் 9-45முதல் 10-15 வரையும் ஒலிபரப்பப்படவுள்ளன.

நேயர்கள் அலைவரிசை பற்றிய கருத்துகளை தபால் பெட்டி எண் 3035 புதுடில்லிக்கு அல்லது தபால் பெட்டி எண் 654 கொழும்புக்கு எழுதுமாறு கோரப்பட்டுள்ளது. (கெ-உ)

## கலப்பட கடலை எண்ணை: 242 பேர் ஆஸ்பத்திரியில்

### ஒருவர் பலி!

சென்னை, செப். 7

கலப்படம் செய்யப்பட்ட கடலை எண்ணையில் தயாரிக்கப்பட்ட பலகாரத்தை உண்ட 242 பேர் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டனர்.

கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறுபகுதிகளிலும் வசிக்கும் இவர்கள் அனைவரும் ஒரே எண்ணை ஆலையில் தயாரிக்கப்பட்ட எண்ணையில் தயாரித்த பலகாரங்களை உண்டனராம்.

இவர்களில் 18 வயது வாலிபர் ஒருவர் இந்த நஞ்சு எண்ணைக்குப் பலியாகியுள்ளார். சிகிச்சையின் பின்னர் 242 பேரும் ஆபத்தான நிலையைத் தாண்டிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இசசம்பவம் தொடர்பாக கடலை எண்ணை ஆலை அதிபர் ஒருவரும் மூன்று சில்லறை விற்பனையாளரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (இ)

## "இந்திராவைக் கைது செய்ய அவசியமானால் சட்டத்தைத் திருத்துங்கள்"

### நம்பூதிரிபாத் மீண்டும் வலியுறுத்து

திருவனந்தபுரம், செப். 7

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைக் கைதுசெய்து விசாரிக்கவேண்டும் என்று இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. நம்பூதிரிபாத் மீண்டும் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

கோழிக்கோட்டில் நடைபெற்ற கூட்டம்ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

இந்திய அரசியல் சாசனத்தை அவமதித்த குற்றம் ஒன்றே இந்திராவைக் கைது செய்யப் போதுமானதாகும் என்றும் அவர் கூறினர்.

திருமதி இந்திரா காந்தியைக் கைதுசெய்வதற்குசட்டம்இடந்தரவில்லையென கூறப்படுவதை வன்மையாகக் கண்டித்த திரு நம்பூதிரிபாத், அவசிய சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (இ)

## பூட்டோவுக்கு நீதிமன்றக்காவல்

லாகூர், செப். 7

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ஜனப் சுல்பிகார் அலி பூட்டோ நீதிமன்றக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று ஜனப் பூட்டோ லாகூர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது இவர் மீதான பொலிஸ் விசாரணைகள் முடிவுற்றதாக பொலிசார் தெரிவித்ததை அடுத்து நீதிமன்றக் காவல் உத்தரவு வழங்கப்பட்டது.

1974-ம் ஆண்டு நவம்பர் மாதம் முன்னாள் சட்டசபை உறுப்பினர் ஒருவரின் தந்தையின் கொலை தொடர்பாகவே ஜனப் பூட்டோமீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (இ)

## பண்டிதர் 19-ம் திகதி பல்கேரியா பயணம்

யாழ்ப்பாணம், வியாழன்

பல்கேரியாவில் நடைபெறவிருக்குப் சர்வதேச பாராளுமன்ற சங்கக் கூட்டத் தொடரில் கலந்துகொள்வதற்காக ஊர்காவற்றுறை தேசிய அரசு பேரவைஉறுப்பினர் பண்டிதர் கா. பொ இரத்தினம் இம்மாதம் 19ம் திகதி பல்கேரியாவுக்குச செல்லவிருக்கிறார்.

இம்மாநாடு இம்மாதம் 20ம் திகதி முதல் 30ம் திகதி வரை பல்கேரியாவில் நடைபெறுகின்றது. இம்மாநாட்டில் கலந்துகொள்ளும் மற்றொரு தமிழ் தேசிய பேரவை உறுப்பினரான திரு. வி. என். நவரெத்தினம் கடந்த திங்கட்கிழமை பல்கேரியா சென்றுள்ளார். (கெ-உ)

## அமைதிக்காகப் பிரார்த்தனை

உடுப்பிட்டி, புதன்

இலங்கையில் அமைதியும், சமாதானமும் நிலவவேண்டுமென்று கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் விசேஷ ஆராதனை நடத்தப்பட்டது. வண. பிதா பீட்டர் துரைரத்தினம் அடிகளாரினால் இவ்விசேட ஆராதனை நடத்தப்பட்டது. (அ)

## அளவெட்டிவயல்கள் பாசன வசதி பெறப்போகின்றன

பண்டத்தரிப்பு, புதன்

அளவெட்டியிலுள்ள முக்கிய குளமான பினைக்கைக்குளம் வெகு விரைவில் ஆழமாக்கப்பட்டு விஸ்தரிக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை நீர்ப்பாசன நெடுஞ்சாலை அமைச்சு மேற்கொண்டுவருகின்றது இக்குளத்தை ஆழமாக்குவதன்மூலம் இப்பகுதியிலுள்ள சுமார் 500 ஏக்கர் வயற்காணிகளுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்குமெனக் கூறப்படுகின்றது. (அ)

## தமிழ் ஊழியர்கள்: ஒருமித்து முடிவு எடுக்க வேண்டும்

உடுப்பிட்டி, புதன்

"வன்முறைகளுக்கு இலக்காகித் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும்முகமாக தமது சொந்த மண்ணுக்கு வந்துள்ள ஆயிரக்கணக்கான தமிழ் ஊழியர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து ஏகமனதான முடிவுக்கு வரவேண்டும்."

இவ்வாறு பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் கேட்டுக்கொண்டார்.

உடுப்பிட்டி, பருத்தித்துறைத் தொகுதிகளைச் சேர்ந்த வெளி மாகாணங்களில் பணிபுரிந்து இடம்பெயர்ந்த உத்தியோகத்தர்களாகத் திரும்பியுள்ள 500க்கு மேற்பட்டோர் கலந்துகொண்ட ஆலோசனைக் கூட்டம் ஒன்றில் பேசுகையில்அவர் மேற்கண்டவாறு கூறினர்.

இக்கூட்டம் பருத்தித்துறை சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய முன்றலில் திரு. நடராசா தலைமையில் நடைபெற்றது.

பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"இவ்வூழியர்கள் மத்தியில் மூன்று விதமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன அவையாவன: (1) மீண்டும் வேலைக்குத் திரும்பிச் செல்வது (2)காலதாமதமாகி வேலைக்குத் திரும்புதல் (3)முற்றாகவே வேலைக்குத்திரும்பிச் செல்லாது விடுதல். இதில் எல்லோரும் ஏகோபித்து ஒரு முடிவெடுப்பதுதான் சிறந்ததாகும்."

உடுப்பிட்டி எம். பி. திரு. இராஜலிங்கமும் பேசினர். (அ)

## இவர்களின் நிலை

யாழ்ப்பாணம், வியாழன்

நாட்டில் இடம்பெற்ற கலவரங்களினால் நிலைபெயர்ந்த துறைமுக (சரக்கு) கூட்டுத்தாபன ஊழியர்கள் தமது நிலை குறித்து ஆராய்வதற்கு நாளைக் காலை நல்லூர்க் கந்தசாமி கோவில் முன் வீதியில் உள்ள பிரதம அத்தியட்சகர் இல்லத்தில் கூடவிருக்கின்றனர்.

இக்கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள் அமைச்சுக்கு அறிவிக்கப்படுமாம். (கெ-உ)

## நில அளவையாளர் தீர்மானம்

யாழ்ப்பாணம், வியா.

வன்முறைச் சம்பவங்களை அடுத்து இடம்பெயர்ந்த அரச ஊழியர்கள் அனைவரும் யாழ்ப்பாணம் டதிம்மர் மண்டபத்தில் கூடி எடுத்த முடிவை முழுமையாக ஏற்றுக் கொண்டு அம்முடிவுக்கமைய நடப்பது என்ற தீர்மானம் இடம்பெயர்ந்த நிலஅளவையாளர் மன்றத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திரு. இ மயில்வாசனம் தலைமையில் மேற்படி மன்றத்தினர் கூடி இத்தீர்மானத்தை நிறைவேற்றினர்.

இக்கூட்டம் யாழ். கச்சேரி நிலஅளவையாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. (கா-இ)

## நாட்டுநிலை பற்றி ஜி. ஜி. காங்கிரஸ் ஆராயும்

யாழ்ப்பாணம், வியா.

நாட்டில் கலவரத்தால் ஏற்பட்டஉயிர்ச்சேதம், பொருட்சேதம் முதலியவற்றால் எழுந்த அரசியல் நிலைமை பற்றி ஆராய்வதற்கு தமிழ் ஈழ ஜி. ஜி. காங்கிரஸ் கமிட்டி இம்மாதம் 11-ம் திகதி கூடுகிறது.

சோண்டாவிலிலுள்ள ஜி.ஜி காங்கிரஸ் தலைமைக் காரியாலயத்தில் திரு. ஆர். என். சிவப்பிரகாசம் தலைமையில் இக்கூட்டம் நடைபெறவிருக்கிறது.

பிரதமர் கூட்டவிருக்கும் சர்வகட்சி மாநாட்டிற்கு ஜி. ஜி. காங்கிரஸுக்கு அழைப்புக் கிடைக்கும் பட்சத்தில் சமர்ப்பிக்கவிருக்கும்கோரிக்கைகள் பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது. க-அ

## அன்பளிப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

வறுத்தலை விளான் வாலிபர் சங்கத்தினர் ஆசிரியர் திரு த. முகாசிலம் தலைமையில் உணவுப் பொருட்களை கோப்பாய் அகதிகள் முகாமிற்கு வழங்கினர். (கா-அ)

பல்கலைக்கழக மாணவர் நிலை

# சகல வளாகப்பிரதிநிதிகள்

## குழு ஆராய்ந்து முடிவெடுக்கும்

யாழ்ப்பாணம், வியா.
பல்கலைக்கழக மாணவர்களின் நிலைபற்றி, இலங்கைப்பல்கலைக்கழகத்தின் சகல வளாகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நடவடிக்கைக்குழு ஆராய்ந்து முடிவெடுக்கும்.

கடந்த திங்கட்கிழமை யாழ். மத்தியகல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கட்டுப்பெத்த வளாக மாணவர்கள், விரிவுரையாளர்களின் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

மாணவர்களின் பாதுகாப்பு, பயிற்சிநெறிகளைத் தொடர்தல் தொடர்பாகப் பிரதிநிதிகள்குழு தனது முடிவை எடுக்கும். இம்முடிவு சகல வளாகங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

ஒவ்வொரு வளாகத்துக்குமுரிய தனிப்பட்ட பிரச்னைகளை வளாக நிர்வாகத்துடன் பேசித் தீர்ப்பது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ். வளாகம் உட்பட ஆறு வளாகங்களையும் சேர்ந்த தமிழ் மாணவர்களின் பொதுவான பிரச்னைபற்றி ஒரேவிதமான முடிவை எடுப்பது என்றும், இம்முடிவு உணர்ச்சிக்கு இடமின்றி கொள்கைக்கே முக்கியத்துவம் கொடுத்துத் தீர்க்கமாக ஆராய்ந்து எடுக்கப்படவேண்டும் என்றும் கூட்டத்தில் மேலும் தீர்மானிக்கப்பட்டது.

ஏனைய வளாகங்களும் தங்களுக்குள்ள பிரச்னைகள் பற்றி ஆராய்ந்த பின்னர் ஒவ்வொரு வளாகத்தையும் சேர்ந்த குறிப்பிட்ட பிரதிநிதிகள் யாழ். வளாகத்தில் கூடி தமிழ்மாணவர்களின் இந்தப்பொதுவான பிரச்னைகள் பற்றிய முடிவை எடுப்பார்கள். இவை தொடர்பாக திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலுள்ள மாணவர்களின் கருத்துக்களும் பெறப்படும்.

மாணவர்களின் நலனில் அக்கறையுள்ள எவ்வியக்கத்துடனும் தொடர்புகொண்டு தமது முடிவைச் செயல்படுத்த நடவடிக்கைக்குழு தயங்கக்கூடாது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இவ்விஷயங்கள் தொடர்பாகப் பேராதனை வளாக மாணவர்கள் இன்று யாழ். பரியோவான் கல்லூரியில் கூடி ஆராயவிருக்கிறார்கள். இக் கூட்டத்தில் கட்டுப்பெத்த வளாகத்தைச்சேர்ந்த 10பேர் கொண்ட குழுவும் கலந்துகொள்ளும். கொழும்பு வளாகத்தினரும் விரைவில் கூடவிருக்கின்றனர்.

இக்கூட்டத்தில் யாழ்ப்பாணம், பேராதனை, வித்தியாலங்கார வளாகங்களைச் சேர்ந்த மாணவர்களும் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர். கட்டுப்பெத்த தமிழ்ச் சங்கத்தின் 'நுட்பம்' சஞ்சிகை ஆசிரியர் திரு. யோகராசா தலைமையில் கூட்டம் நடைபெற்றது. (அ)

## "இவர்களுக்கும் நிதியுதவி வழங்குக"

### அமைச்சருக்கு கோரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்
கொழும்பைத் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து வந்துள்ள அகதிகளுக்கு இதுவரை நிவாரணமாக நிதியுதவி எதுவும் வழங்கப்படவில்லை. உறவினர், நண்பர்கள் வீடுகளில் தஞ்சமடைந்துள்ள இவ்வகதிகள் கலவரத்தின்போது சகல உடைமைகளையும் இழந்துவந்துள்ளவர்."

ஐக்கியதேசியக்கட்சி மானிப்பாய்த்தொகுதி அமைப்பாளர் திரு. எஸ். அலோசியஸ் சமூகசேவை அமைச்சர் திரு. அசோகா கருணரத்னவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

"கொழும்பு அரசாங்க அதிபர், சமூகசேவை இலாகா மூலம் ஒவ்வொரு அகதிக்கும் 300 ரூபா வழங்கியுள்ளதாக அறிகிறேன். தற்போது வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள நிலையில் அகதிகளுக்குத் தஞ்சமளித்துள்ளவர்கள், அவர்களுக்கு நிதியுதவியளிக்கமுடியாத நிலையில் உள்ளார்கள் என்பதைத் தாங்கள் கவனத்தில் எடுக்கவேண்டும். அகதிகளின் உடனடித்தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு அவர்களுக்கு நிதியுதவி வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்." (க-அ)

# இடம்பெயர்ந்துவந்துள்ள

## டாக்டர்களுக்கு இடைக்கால ஏற்பாடு

### அரசவைத்தியர்கள் சங்கம் கோருகிறது

பண்டத்தரிப்பு, புதன்
"அண்மையில் நடைபெற்ற வன்செயல்கள் பற்றிப்பாரபட்சமற்ற முறையில் விசாரணை நடாத்தி குற்றவாளிகளாகக்காணப்படுவோர் தண்டிக்கப்படவேண்டும். அதுவரை ஓர் இடைக்கால ஏற்பாடாக இடம்பெயர்ந்து வந்துள்ள பதிவுசெய்யப்பட்ட வைத்தியர்களையும், உபவைத்தியர்களையும் தற்போது கடமையாற்ற அனுமதிக்கவேண்டும்."

இவ்வாறு அரசினரைக்கேட்டுக்கொள்ளும் முக்கிய தீர்மானம் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலை வெளிநோயாளர் சிகிச்சை மண்டபத்தில் நடைபெற்ற அரசாங்கவைத்தியர்களின் விசேஷ பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. டாக்டர் ரி. கோபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இதர தீர்மானங்கள் பின்வருமாறு.

"நடைபெற்றஉயிர்ச்சேதம்; உடற்சேதம், பொருட்சேதம் ஆகியவற்றிற்குப் போதிய நஷ்டஈடு வழங்கவேண்டும்.

"இடம் பெயர்ந்துவந்துள்ள அரசாங்க ஊழியர்களுக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தவேண்டும்.

"இடம்பெயர்ந்து வந்தவர்களின் பிள்ளைகள் அவர்களின் சொந்த இடங்களிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்க ஒழுங்குகள் செய்துதரப்படல் வேண்டும்".

பாதிக்கப்பட்டோர் நலன் கருதி அவர்களுக்கு வெளிநாடுகளில் உத்தியோக வாய்ப்புகளைப் பெறுவதுபற்றி ஆராய்ந்து செயற்குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்க டாக்டர் எஸ். பத்மநாதன் தலைமையில் ஓர் உபகுழுவும் தெரிவு செய்யப்பட்டது.

கலவரத்தினால் பாதிக்கப்பட்டோர் தங்கள் நஷ்டங்கள், அனுபவங்கள் ஆகியவற்றை இம்மாதம் 9-ம் திகதிக்கு முன்னதாக செயற்குழுவிற்கு அனுப்பிவைக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. (அ)

## கரவெட்டி கத்தோலிக்கர் உதவி

உடுப்பிட்டி, புதன்
கரவெட்டிக் கத்தோலிக்க மக்கள் அகதிகளுக்கு நிவாரண உதவிகள்வழங்க முன்வந்துள்ளனர்.

யாழ். அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளோருக்கு வழங்குவதற்காக இப்பகுதிக் கத்தோலிக்க மக்கள் உடை, உணவுப் பொருட்களைத் திரட்டி கரவெட்டிப் பங்குக் கட்டளைக் குரவர் அருட்திரு பீற்றர் துரைரத்தினத்திடம் கையளித்துள்ளனர். (அ)

## முன்னைய பாடசாலைக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், வியா.
கடந்த அரசாங்க காலத்தில் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையிலிருந்து நல்லூர்த் தொகுதிக்கு வெளியே இடமாற்றம் செய்யப்பட்ட நான்கு ஆசிரியர்கள் மீண்டும் அதேபாடசாலைக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் நால்வரும் இம்மாதம் 1-ம்திகதி முத்துத்தம்பி வித்தியாசாலையில் தமது கடமைகளை ஏற்றனர்.

திருவாளர்கள் சு. துராஜநாயகன், த. க. வில்வராஜா, ம. செல்வகுருநாதன், க. இ. பாலகிருஷ்ணன் ஆகியோரே குறிப்பிட்ட நான்கு ஆசிரியர்களுமாவர். ஐ. தே. க. பதவிக்கு வந்ததும் இவர்கள் தமது பழைய பாடசாலையான முத்துத்தம்பி வித்தியாசாலைக்கு வந்து சேர்ந்தனர். (அ)


## ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் தேசிய வீடமைப்புத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. மாணிக்கம் இராசரத்தினம் அவர்களால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி கீழே விபரிக்கப்படும் சுளிபுரம் - மூளாய் தெற்கு, திரு. வேலாயுதம் தியாகராசா, திருமதி நாகரத்தினம் தியாகராசா ஆகிய இருவரும் 1971 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 21-ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் திரு க. சேனாதிராசாவால் 9377ஆம் இலக்கத்தில் நிறைவேறிய ஈட்டு உறுதியின் பெயரால் வரவேண்டிய தொகை ரூபாய் 26,874-33 சதமும். 21-10-76 க்குப் பின் இறுபட்ட தொகை நீக்கி மிகுதியையும் 21-10-76 திகதி தொடக்கம் ரூபாய் 18,640-80 சதத்திற்கு வருடமொன்றுக்கு 100-க்கு 11 வித வட்டியையும் குறிக்கப்பட்ட ஈட்டுமுறியின் பிரகாரம் அறவிடவேண்டிய அபராதத் தொகையையும் அறவிடுவதற்கு ஏற்பட்ட செலவுத் தொகையையும் அறவிடக் கீழே விபரிக்கப்படும் ஆதனம் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் (புரட்டாதி) மாதம் 19 ஆம் திகதி (19-9-77) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானைக் கோவிற்பற்று மூளாயிறை "பொக்கன் ஓடை" நிலப்பரப்பு 14, ஆனால் உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. எஸ் ஏகாம்பரத்தால் 27-5-59 இல் தயாரிக்கப்பட்ட 689ஆம் இலக்கப் படத்தின்படி நிலப்பரப்பு 13, குளி 14 2/10ம், கிணறும், பயிர்களும், புதிதாகக் கட்டிய கல்வீடும். எல்லை: கிழக்கு, சதாசிவம்பிள்ளை வேலாயுதத்தின் உரிமைக்காரருக்கும் சண்முகம் சதாசிவத்திற்குமுரிய ஆதனம். வடக்கு: சண்முகம் சதாசிவத்திற்கும், பொன்னம்பலம் பெண் தங்கத்திற்கும் உரிய ஆதனம். மேற்கு: கிராமசபை ஒழுங்கை. தெற்கு: பிரத்தியேக கையொழுங்கை இதடங்கலும்.

சி. சங்கரப்பிள்ளை
ஏல விற்பனையாளர்.

தெல்லிப்பழை.
29-6-1977

7012



## ஈட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்
வழ. இல: எம். பி. 14889.
வட்டுக்கோட்டை மேற்கு, தாமோதரம்பிள்ளை பத்மநாதன்.
எதிராக வாதி
யாழ்ப்பாணம் திருநெல்வேலி பலாலி வீதி 1. சீனிவாசகம் சுந்தரலிங்கமும், 2. பெண் இராசலெட்சுமியும், 3. தம்பிப்பிள்ளை ஐயாத்துரையும், 4. பெண் செல்லம்மாவும்.
பிரதிவாதிகள்

MB/14889 ஆம் இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம் 1977 ம் ஆண்டு செப்டம்பர் மீ 30 உ (30-9-77) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபா 18,200 உம், மேலும் இதில் 10,000 ரூபாவுக்கு 4-6-75 தொடக்கம் 30-9-76 வரை வருடமொன்றுக்கு 12% வீத வட்டியும் அதன்பின் சேர்ந்த முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை வருடமொன்றுக்கு 9% வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 824-36 சதம் பவுண்டேச் மற்றும் விற்பனைக்குரிய சலார்களும்.

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கும் பகுதியும் நல்லூர் கோவிற்பற்று திருநெல்வேலி இறை "வடலித் தோட்டம்" நிலப்பரப்பு 8. இதில் வடக்குப் பக்கமாக நிலப்பரப்பு 4, வீடும், குசினியும், கிணறும், பயிர்களும்- இந்த நிலப்பரப்பு 4 க்கும் எல்லைக்காரர்கள். கிழக்கு- தம்பிப்பிள்ளை சின்னத்துரையின் உரிமைக்காரருக்கும், கனகசபை பெண் கனகத்திற்கும், மறுபேருக்கும் பாதையும், வடக்கு-ஒழுங்கை, மேற்கு- ஆறுமுகம் கைம்பெண் சின்னம்மா, தெற்கு- தம்பிப்பிள்ளை ஐயாத்துரையும் பெண் செல்லம்மாவும், இதன் மிகுதி ஆதனமான தெற்கெல்லைக் காணிக்கும் வடக்கிலுள்ள ஒழுங்கைக்கும் போய்வர இந்த ஆதனத்தில் கிழக்கெல்லை ஓரமாக விடப்பட்ட 9 அடி அகலமுள்ள பாதைப் பாவிப்புரித்து புறநீங்கலாக இதடங்கலும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
நீதிமன்ற விற்பனை ஆணையாளர்
ஏலவிற்பனவாளர்

"இராசகிரி"
643, காங்கேசன் துறை வீதி
யாழ்ப்பாணம்.

7014

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 2-30, 6-30
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
**கணவன்**

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 7-00
ஏ.வி.எம் ராஜன்-பானுமதி
**பத்துமாதபந்தம்**

**ராணி**
[யாழ்ப்பாணம்]
தினசரி 10-30, 2-30 மாலை 6-00
சிவாஜி - கே. ஆர். விஜயா
நடித்த
**ராமன் எத்தனை ராமனடி**
(புதிய பிரதி)
எமது அடுத்த வெளியீடு
**பெண் தெய்வம்**

**ராஜா**
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 5-30
போன்: 7180
சிவாஜி - சாவித்திரி
நடித்த
**வடிவுக்கு வளைகாப்பு** [புதிய பிரதி]

**மனோஹரா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30 2-30 6-00
எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ்
அறிமுகம் பவானி
நடித்த
**உழைக்கும் கரங்கள்**
(ஈஸ்ட்மன் கலர்)

**Regal** (Jaffna)
Daily at 10-30 a.m., 3-30 & 6-30 p. m.
SEAN CONNERY in
**"Murder on the Orient Express"**
(Color)

**RIO**
(Jaffna)
Grand Release With New Projector's
Daily 10-30, 4-45, 7-15 p. m. only
EDGAR RICE BURROUH'S
**At The Earth's Core**
FAMILY ENTERTAINMENT

**சாந்தி**
யாழ். நகர்
போன்: 7642.
தினசரி 10-30, 2-30, மாலை 6-30
எம். ஜி. ஆர்., ஜெயலலிதா
நம்பியார், முத்துராமன், சோ
**ஒரு தாய் மக்கள்**
(புத்தம் புதிய பிரதி)

**வெலிங்டன்** [யாழ். நகர்]
தினசரி 10-30, 2-30 மாலை 6-00
விஜயகுமார் - ஜெய்சித்ரா
**தாய் இல்லாக் குழந்தை**

**லிடோ**
போன்: 7808
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
ஜெய்சங்கர்—சுஜாதா
**நீ ஒரு மகாராணி**

**வின்ஸர்**
[யாழ்ப்பாணம்]
தினசரி 10-30, 2-30, 5-30
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா,
கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
**சத்யம்**
(ஈஸ்ட்மன் கலர்)

## கேள்விவிளம்பரம்

### நீர்வேலி கிராமாட்சி மன்றம்

### பத்தாவத்தை ரேட்டு அரசாங்க நன்கொடை வேலை—1977

மேற்படி வேலைக்கு சீல் வைத்த கேள்விகள் என்னால் 1977-ம் ஆண்டு செப்டம்பர் மாதம்22-ம்தேதிபிற்பகல் 1-00 மணிவரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்ரப் பணமாக 15/-ம் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 150/-ம் செலுத்தி செப்டம்பர் மாதம் 20-ம் தேதி பிற்பகல் 2-00 மணிவரை கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விகள் பதிவுத்தபால் மூலம் அனுப்பவேண்டும், அல்லது கந்தோரில் நேரடியாக கையளித்தல் வேண்டும். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கட்கும், நிறைவேற்றுப் பொறியியலாளர், யாழ்ப்பாணம் அவர்கட்கும் ஓர்பிரதி பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

மேற்கொண்டு விபரங்கள் எனது காரியாலயத்தில் காரியாலய நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

கா. மாணிக்கவாசகர்,
விசேட ஆணையாளர்,
கிராமாட்சி மன்றம்,
நீர்வேலி.

கிராமாட்சிமன்ற அலுவலகம்.
நீர்வேலி. 7017

### மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்

### கேள்வி

மானிப்பாய் கோவில் பற்று ப. நோ. கூ. சங்கத்தில் பின் வரும் பொருட்களுக்கு கேள்வி கோரப்படுகின்றது. தேவையானோர் சங்கத்தில் பொருட்களைப் பார்வையிட்டு அதற்குரிய கேள்விகளை 15-9-77 திங்கட்கிழமைக்கு முன்னர் பொது முகாமையாளர் மானிப்பாய் கோவில் பற்று ப. நோ. கூ. சங்கத்துக்கு அனுப்பவும். கேள்விவைப்புப் பணமாக ரூபா 50/- செலுத்தி விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதுடன் ஆகக் கூடிய கேள்வி கோரப்படுபவர்களுக்குப் பொருட்கள் கொடுக்கப்படும்.

பிறின்டெட் சீத்தைகள், பிரின்டெட் வோயில் சாறிகள், லையினிங் வோயில், கைத்தறித் துணிகள், பலதரப்பட்ட சேட் வகைகள்.

பொது முகாமையாளர்
7016 6-9-1977

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

## வரி விளம்பரம்

### தேவை

அனுபவம் வாய்ந்த கணக்கு எழுதுபவர் உடன் தேவை நேரில் வரவும். இல: 16, பெரியகடை, யாழ்ப்பாணம். 7013

### விற்பனைக்கு

வவுனியா - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் 121 ம் கட்டைக்கு அருகில் நல்ல நீர்ப்பாசனவசதியுடன் கூடிய கிணறும், தென்னை, மா, பலா முதலிய நல்ல பிரயோசனங்களுடன் கூடிய 5 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணி விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடவும். சிவாஸ் பண்ணை, 121 ம் கட்டைக்கருகில் விளக்கு வைத்த குளம், ஓமந்தை. 7011

### பயிற்சி

வெளிநாடுகளில் வேலைகள் பெற அரசாங்கத்தால் தனியார்துறை தொழிற்பயிற்சி நிலைய மென அத்தாட்சிபெற்ற இலங்கையின் ஒரே தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறுங்கள். வெல்டிங் (Electric & Gas) இலெக்றிக் வயறிங், ரேடியோ (Transistor), மோட்டார் மெக்கானிசம், PMG Certificate, City & Guilds. விபரங்கள் இலவசமாக அனுப்பப்படும். National Institutes மைற் மண்டபம், 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 6943

### CLASSES

Rapid Revision classes for A/L April 1978 Exam. Science Subject only Classes Commencing - 9th Sept. 1977. Director, Science Centre, Karaveddy. 6997

Rapid Revision Classes for H. N. C. E. & A. L. April 1978 Exam Arts & Commerce Classes commencing - 9th Sept 1977. Director, Modern Education Centre, Karaveddy. 6996

### வகுப்புக்கள்

G. C. E. O/L பரீட்சையில் விசேட சித்திபெறும்பொருட்டு சனி, ஞாயிறு வகுப்புக்கள் 18-9-77ல் ஆரம்பமாகின்றன. கட்டணம் ரூபா 5/- பாடக் குறிப்புகளும் வழங்கப்படும். எமது ஒரேஒரு கிளை நிறுவனம் B M C ஒழுங்கை, வெலிங்டன் சந்தி, மணிக்கூட்டு வீதி, தலைமை அலுவலகம்: யாழ். சட்டநிலையம், பிரதானவீதி, யாழ்ப்பாணம். 7021

### விற்பனைக்கு

யாழ். நகரசபை எல்லைக்குள், புதிய மதில் எல்லையுடன், பழைய வீட்டுடனும், 9 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. 3 பரப்பாகப்பிரித்தும் கொடுக்கப்படும். 27, கடைச்சாமி வீதி, நாவலர் வீதிக்கப்பால், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 7010.

### CLASSES

I.C.M.A., November 1977 classes Commencing on 10-9-77at1-30p.m. Education Centre, 22, Ramiah Chettiar Lane, Hospiatl Road, Jaffna. 7024

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### கேள்வி அறிவித்தல்

நரிக்குண்டு சந்தையிலுள்ள மாட்டிறைச்சிக் கடையை 01-10-1977 தொடக்கம் 31-12-1978 வரை குத்தகைக்கு விடுவதற்கு 16-9-1977 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்படிவங்கள் கேள்வி வைப்புப்பணமாக ரூபா 50/-ம், கேள்விப்படிவக் கட்டணமாக ரூபா 10/-ம் செலுத்துவதன் மேல் 14-09-1977 ம் திகதி புதன்கிழமை பி. ப. 3-00 மணிவரையும் வழங்கப்படும். மேலதிக விபரங்களை மாநகர சபை அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

க. சிவஞானம்
ஆணையாளர்.
யாழ்ப்பாண
மாநகராட்சி மன்றம்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
06-09-1977. 7020

### நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், வியா. சுவாமி சிவானந்த மகரிஷியின் ஜனனதினவிழா இன்று காலை நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் கொண்டாடப்படவிருக்கிறது. (உ)

### கீரிமலையில்

யாழ்ப்பாணம், வியா. சுவாமி சிவானந்தர் ஜயந்தி தினம் இன்று பிற்பகல் கீரிமலை ஸ்ரீசடையம்மாள் சமாதி நிலையச் சிவாலயத்தால் கொண்டாடப்படுகிறது. பூஜைகளும் ஆராதனைகளும் இடம்பெறும். (அ)

யாழ்ப்பாணம், வியாழன் நாட்டில் இடம்பெற்ற அசம்பாவிதங்களால் ஒத்தி வைக்கப்பட்ட இலங்கை கயரோகசங்க கோப்பாய்கிளைக் கூட்டம், இன்றுகாலை கோப்பாய் வைத்திய அதிகாரி காரியாலயத்தில் நடைபெறவிருக்கிறது. (கெ-உ)

**ஸ்ரீதர்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, மாலை 6-00
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா
நடித்த
**பட்டணத்தில் பூதம்**
(கறுப்பு வெள்ளைப் பிரதி)
நாளை முதல்
சிவகுமார்
சுஜாதா
**அன்னக்கிளி**

வடபகுதி விளைபொருள்களை

# கொள்முதல் செய்து கொழும்புக்கு அனுப்புவர்

யாழ்ப்பாணம், வியா.

வடபகுதியிலுள்ள பதிவு செய்யப்பெற்ற விவசாயிகளிடமிருந்து வெங்காயம், பீற்றூட், பூசனிக்காய், கருவாடு ஆகியவற்றை கொள்முதல் செய்து ரயில்மூலம் கொழும்பிற்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்தகவலை, யாழ்ப்பாணம் விற்பனை இலாகா உதவிஆணையாளர் தெரிவித்தார்.

வேலணை, சாவகச்சேரி, சுன்னாகம், கிளிநொச்சி ஆகிய இடங்களிலுள்ள கொள்முதல் நிலையங்கள் மூலம் இவற்றை வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இப்பொருட்களுக்கான பணம், பொருட்கள்கொழும்பு மொத்த விற்பனை நிலையத்திற்கு அனுப்பப்பட்டு, ஒரு வாரத்தின் பின்னரே வழங்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையங்களில், முதல் ரக செத்தல் மிளகாய் ரூத்தல் 9 ரூபா வீதம் கொள்முதல் செய்யப்படுமென்றும், இதற்கு உடனடியாக பணம் வழங்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார். (க)

# சேமிப்புக் கணக்கு வட்டி அதிகரிப்பு

கொழும்பு, புதன்

தேசிய சேமிப்பு வங்கி சேமிப்புக் கணக்குகளுக்கான வட்டி விகிதத்தை 7.2 விகிதத்திலிருந்து 8.4 விகிதமாக அதிகரித்துள்ளது.

இப்புதிய வட்டி விகித அதிகரிப்பு அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் அமுல் செய்யப்படவுள்ளது.

நிலையான வைப்புக் கணக்குகளுக்கு இன்று வட்டி விகிதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

6 மாதத்துக்கு மேல் உள்ள நிலையான வைப்புக் கணக்குக்கு 12 வீதமும் 1 வருடத்துக்கு மேலான வைப்புக் கணக்குக்கு 15 வீதமும் 18 மாதத்துக்கு மேலான வைப்புக் கணக்குக்கு 18 வீதமும் வட்டி வழங்கப்படும். (இ)

# பலாலி ஆசிரிய கலாசாலை

யாழ்ப்பாணம், வியா.

நல்லூர்க் கந்தசுவாமிகோயில் தேர்த்திருவிழாவையொட்டி 12ம் திகதியும், முஸ்லிம்களின் ரம்ழான் பெருநாளையொட்டி 16ம் திகதி வெள்ளிக்கிழமையும் பலாலி ஆசிரிய கலாசாலை மூடப்பட்டிருக்கும் என்று கலாசாலை அதிபர் திரு. கந்தசாமி அறிவித்துள்ளார். கடந்த 5ம் திகதி கலாசாலை ஆரம்பமான போதிலும் இதுவரை வருகை தராத கிழக்கு, மத்திய மாகாண மாணவர்கள் 19ம் திகதி கலாசாலைக்கு வருவர் என அதிபர் எதிர்பார்க்கின்றார். (கெ)

# மருத்துவ மாணவர் ஆலோசனை

யாழ்ப்பாணம், வியாழன்

வன்முறைகளால் பாதிக்கப்பட்ட கொழும்பு வளாக மருத்துவ பீட தமிழ் மாணவர்கள் தமது பிரச்னை குறித்து ஆராயும் பொருட்டு நாளை வெள்ளிக்கிழமை காலை யாழ் மத்தியகல்லூரி மண்டபத்தில் கூடவிருக்கின்றனர். (உ)



# எஸ். ரி. ஆருக்கு 'திருப்பணித் தவமணி' பட்டம்

யாழ்ப்பாணம், வியா.

'சைவமும் தமிழும் தமிழ் இனத்தின் இருவிழிகள் இவற்றைத் தமது கண்ணெனப் போற்றிப் பாதுகாக்கின்ற பொதுநலத் தொண்டருக்கு 'திருப்பணித் தவமணி' என்னும் பட்டம் வழங்கப்படுவது மிகப் பொருத்தமுடையதாகும்'

இவ்வாறு திருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபை உபதலைவரும், வண்ணை கதிர்வேலாயுதசுவாமிகோவில் தர்மகர்த்தா சபைப் பொருளாளரும், தொழிலதிபருமான திரு. எஸ். ரி. தியாகராசாவுக்கு 'திருப்பணித் தவமணி' என்ற பட்டத்தைச் சூட்டி நல்லை ஞானசம்பந்தர் ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததம்பிரான்சுவாமிகள் பேசுகையில் கூறினார்.

இவ்வைபவம் நல்லை ஆதீனத்தில் இடம்பெற்றது.

தொழிலதிபர் திரு. தியாகராஜா தமக்களிக்கப்பட்ட கௌரவத்திற்கு நன்றி தெரிவித்துப்பேசினர். (கா-அ)

பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்களை

# பாதுகாப்பின்றி திரும்ப அழைப்பதற்கு கண்டனம்!

யாழ்ப்பாணம், வியாழன்

வடபகுதியில் கடமையாற்றிய சிங்கள ஊழியர்கள் எந்தவித அசம்பாவிதமின்றி தெற்கே திரும்பியவர்கள் மீண்டும் வடபகுதிக்கு திரும்புமுன் நிலைபெயர்க்கப்பட்ட தமிழ் அரசாங்க ஊழியர்களை எந்தவித பாதுகாப்புமின்றி இம்மாதம் 12-ந் திகதி வேலைக்குத் திரும்புமாறு அரசாங்கம் அழைப்பு விடுவது கேலிக்கூத்தாக அமைந்துள்ளது என நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கழகத் தலைவர் திரு எஸ் இரத்தினசபாபதி குறிப்பிட்டார்.

அரசாங்க கணக்காய்வு திணைக்க ஊழியர்கள் கூடிய மேற்படி அங்குரார்ப்பணக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் வடமாகாணத்தில் கடமை புரிந்த சிங்கள ஆசிரியர்களின் சம்பளத்தை அவர்களது விலாசத்துக்கு அனுப்பும்படி கல்வித் திணைக்களம் பணித்துள்ளதாக அறிகின்றேன். ஆனால் அதே சமயம் பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட தமிழ் ஊழியர்களுக்கு 50% சம்பளம் மட்டுமே வழங்கப்பட்டது. அரசாங்கம் தமிழ்மக்களின் மீது அக்கறை கொண்டிருக்குமானால் வன்முறைச்சம்பவங்கள் பற்றி ஆராய ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் கேட்டார்.

கணக்காய்வு திணைக்கள ஊழியர்கள் ஒன்றுகூடி மேற்படி பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கழகத்தை ஆரம்பித்தனர். சகல ஊழியர்களும் கழகம் எடுக்கும் தீர்மானங்களுக்கமைய நடக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

கழகத்தின் தலைவராக திரு. எஸ். இரத்தினசபாபதியும் செயலாளராக திரு. எஸ். சிவானந்தனும், தனாதிகாரியாக திரு. எஸ். குகதாஸனும், ஏழு செயற்குழு உறுப்பினர்களும் தெரிவாகினர். கணக்காய்வுத் திணைக்களத்தின் கிளைகளைப் பரவலாக நிறுவுவதென முடிவாகியது. (கெ)

## புனர்வாழ்வு

யாழ்ப்பாணம், வியா

வன்முறைகளால் பாதிக்கப்பட்ட தமிழ் அகதிகளுக்கும் புனர்வாழ்வு அளிப்பது குறித்து ஆராயும் நோக்குடன் தீவுப் பகுதி தமிழர் புனர்வாழ்வுச் சபையின் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது. வணக்கத்துக்குரிய சகோதரர் ஏ. எம். தோமஸ் கூட்டத்திற்குத் தலைமைவகிப்பார். (உ)

## மாவட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் கலவரத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு நிலைபெயர்ந்து சென்றுள்ளதால் இவர்கள் தற்பொழுது வசித்துவரும் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் விபரங்களைத் தெரிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

பின்னர் இவ்விபரங்கள், இவர்கள் கலவரத்தின் போது தங்கியிருந்த உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் வழங்கப்படும் படிவத்தில், கலவரத்தினால் ஏற்பட்ட சேதம் பற்றிய முழு விபரங்களையும் தெரிவித்து, படிவத்தை உதவி அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்க வேண்டும். (க)

# அஞ்சலிக் கூட்டம் நடத்த முடிவு

யாழ்ப்பாணம், வியா.

நாட்டில் ஏற்பட்டுள்ள துக்க சூழ்நிலைகாரணமாகவும் கழகத் துணைத்தலைவர் டாக்டர் ச. பொன்னம்பலத்தின் மறைவை முன்னிட்டும் இம்மாதம் நடைபெறவிருந்த கல்வி கலைகலாச்சாரக்காப்புக்கழகக் காரியாலயக் கால்கோள் விழாவை வேறொருகாலத்தில் செய்வதெனக்கழகம்முடிவுசெய்துள்ளது.

ஆணைத்தலைவரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிப்பதற்காக நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற கழகக்கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது. சட்டத்தரணி த. சோமசுந்தரம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

அமரர் டாக்டர் பொன்னம்பலத்தின் சபிண்டீகரண தினத்தன்று டேவிட் வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் அஞ்சலிக்கூட்டம் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (அ)

முகாம்களிலிருந்து

# திரும்பிச் செல்லும் அகதிகளுக்கு ரூ. 350 வழங்கப்படும்

யாழ்ப்பாணம், வியாழன்

அகதிகள் முகாமிலிருந்து தங்கள் சொந்த இடங்களுக்கு திரும்பிச்செல்ல விரும்பும் அகதிகளுக்கு சமூகசேவை இலாகா 350 ரூபா வழங்கும்.

யாழ். சமூகசேவை இலாகா உதவி அதிபர் திரு. கே. கங்காதரன் நேற்று மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

வீடுகள் கட்டுவதற்கு 300 ரூபாவும், உடைகள் மற்றும் அடுப்படிசாமான்கள் வாங்குவதற்குமாக 50 ரூபாவும் வழங்கப்படும் என்றும் அவர்தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: அகதிகள் முகாம்களிலிருந்து தங்கள் சொந்தஇடங்களுக்கு செல்லவிரும்புகிறவர்களுக்கே, இப்பணம் வழங்கப்படும்.

கொழும்பிலுள்ள அகதிகள் முகாம்களிலிருந்து, தங்கள் சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல விரும்பிய அகதிகளுக்கு, 350 ரூபா வழங்கப்பட்டது. இதே போல், யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கோப்பாய் கிளிநொச்சி தொகுதிகளிலுள்ள அகதிகள் முகாம்களிலிருந்து தங்கள் சொந்தஇடங்களுக்கு திரும்பிச்செல்ல விரும்பும் அகதிகளுக்கு சமூகசேவை இலாகா 350 ரூபா வழங்கும்.

சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்லாமல், தொடர்ந்து அகதிகள் முகாமில் இருப்போர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்க சமூகசேவை இலாகாவினர், புள்ளி விபரம் திரட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஒவ்வொரு அகதிகள் முகாம்களிலும், இந்தப்புள்ளி விபரம் திரட்டப்படும். இது அவர்களின் எதிர்கால புனர்வாழ்வு திட்டத்திற்கு பயன்படக் கூடியதாக இருக்கும். (க)

## புதிய கடைகளை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கடைகளை அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்கனவே விசேட ஆணையாளரால் கோரப்பட்டுள்ளன. நாளை நண்பகல் 12 மணியுடன் கேள்விப்பத்திரம் கோரும் காலக்கெடு முடிவடைகிறது. நாளை பிற்பகல் 3-00 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் உடைக்கப்பட்டு, உடனடியாகவே ஒப்பந்தக்காரரிடம் வேலை கையளிக்கப்படும்.

தமது சகல வேண்டுகோள்களையும் அப்படியே ஏற்றுக்கொண்டு, கடைகள் கட்டுவதற்கு அங்கீகாரமளித்த உள்ளூராட்சி அமைச்சருக்கும், ஆணையாளருக்கும் யாழ். மாநகர விசேட கமிஷனர் நன்றி தெரிவித்துள்ளார். (க-இ)

## திறப்பு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உணர்ந்துகொள்ளக்கூடியவன் தான் மனிதன். உங்கள் துன்பங்களையும், துயரங்களையும் நான் உணருகின்றேன். அதனால்தான் இவ்வளவு குறுகிய காலத்தில் நடவடிக்கை எடுத்தேன்.

இக்கடைச் சொந்தக்காரர் நிலைமை பற்றி யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், திரு. குமார் பொன்னம்பலம், முன்னாள் மாநகரசபை உறுப்பினர் திரு. எம். சி. பசீர் மற்றும் பலர் என்னை நேரில்சந்தித்துவிளக்கினார்கள்.

இந்தக் கடைகளை மீண்டும் கட்டுவதற்கு எனக்குள்ள கடமையும், ஆர்வமும், பொறுப்புணர்ச்சியும், மற்றவர்களிலும் பார்க்க எவ்விதத்திலும் தாழ்ந்த நிலையில் இருக்கமுடியாது. அப்படியிருந்தால் நான் இந்த இடத்தில் இருக்கமுடியாது.

கடை உரிமையாளர் தங்கள் கருத்துக்களையும் தெரிவித்தனர். (க)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8 ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.